**பெயர்.திரு.அமரன்**

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**2 முதல் 4 பிரவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

7. வா.சா.ஆ.1 ஆன 15.09.1935 தேதியிட்ட ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் நான் இவ்வழக்கில் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வெங்கட்ராம அய்யர் உட்பட நாங்கள் வேட்டுவ கவுண்டர் சமூகம், வெள்ளாள கவுண்டர் சமூகம், கம்மவார் நாயுடு சமூகம், நாயக்கர் சமூகத்தை சார்ந்த 13 நபர்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு ஒப்பந்தம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் முன்னோர்களான அழகிரிசாமி அய்யர் மற்றும் வெங்கட்அய்யர் ஆகியோர்கள் இவ்வழக்கு சம்பந்தப்பட்ட கரிய வரதராஜ பெருமாள் கோவிலின் பூசாரிகள் என்ற அடிப்படையில் தான் வா.சா.ஆ.1 ஐ எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

8. மேற்படி அழகிரிசாமி அய்யர் மற்றும் வெங்கட் அய்யர் ஆகியோர்கள் மெட்ராஸ் இந்து சமய அறநிலை போர்டு கமிஷனர் நீதிமன்றத்தில் O.A.எண்.397/1934 வழக்கு சம்பந்தப்பட்ட கோவிலின் பரம்பரை அறங்காவலர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி O.A.எண்.397/1934 ன் தீர்ப்பு நகலை நான் பார்த்து உள்ளேனா என்றால் பார்த்தது இல்லை. மேற்படி விவரம் தெரிந்தே நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் முன்னோரான கெம்பனகவுண்டர் O.A.எண்.397/1934 வழக்கின் மனுதாரராக இருந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. கோபிசெட்டிபாளையம் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.529/1933 என்ற வழக்கு நடந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் O.A.எண்.397/1934 வழக்கின் தீர்ப்பு சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி

விவரங்களை தெரிந்தே நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. தாவா கோவில் சம்பந்தபட்ட அசல் வழக்கு எண்.529/1933 வழக்கில் வா.சா.ஆ.1 ன் தரப்பினர்களான அழகிரிசாமி வாதியாகவும், அவரது சகோதரரான வெங்கட் அய்யர் 1 ம் பிரதிவாதியாகவும் இருந்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. இவ்வழக்கின் 2 , 3 பிரதிவாதிகளின் முன்னோர்கள்தான் மேற்படி வழக்கில் 2 முதல் 6 பிரதிவாதிகளாக இருந்துள்ளார்கள் என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. **O.A**.எண்.397/1934 மற்றும் அசல் வழக்கு எண்.529/1933 வழக்குகளும் தாவா கோவிலின் நிர்வாகம் மற்றும் மிராசுதாரர் சம்பந்தபட்ட வழக்குகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆன 15.09.1935 தேதியிட்ட ஆவணத்தில் தரப்பினர்களான எனது சமூகம் உள்பட்ட 13 நபர்களும் மேற்படி **O.A**.எண்.397/1934 மற்றும் அசல் வழக்கு எண்.529/1933 ஆகிய இரு வழக்குகளிலும் தரப்பினர் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

15.09.1935 வரைக்கும் எனது சமூகம் உட்பட ஆவணத்தின் தரப்பினர்களான 13 நபர்களுக்கும் மேற்படி கோவில் நிர்வாகம் மற்றும் மிராசில் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு தொடர்பு இருந்திருந்தால் மேற்படி இரண்டு வழக்குகளிலும் மேற்படியார்களை தரப்பினர்களாக கட்சி சேர்த்து இருப்பார்கள் என்றும், தொடர்பில்லாத காரணத்தினால்தான் கட்சி சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியின் முன்னோரான கெம்பனகவுண்டர் தன்னை பரம்பரை அறங்காவலர் என்றும், கோவிலின் மிராசு உரிமைக்காகவும் அசல் வழக்கு எண்.397/1934 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தனர் என்றால் அது பற்றி தெரியாது. இவ்வழக்கில் **O.A**.எண்.397/1934 மற்றும் அசல் வழக்கு எண்.529/1933 வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் முன்னோர்கள் மேற்படி வழக்கின் 2 முதல் 6 பிரதிவாதிகளாக இருந்து மேற்படி வழக்கில் 12 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் மேற்படி ஆவணங்கள் குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது.

11. மேற்படி வழக்கில் எங்களுக்கு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்த அழகிரிசாமி மற்றும் வெங்கட்அய்யர் குறித்து கோவில் சம்மந்தப்பட்ட மிராசு உரிமை மற்றும் நிர்வாக சம்பந்தப்பட்ட எந்த விதமாக உரிமை உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் தீர்ப்புகள் வந்த பிறகு மேற்படி வழக்கின் மனுதாரர் கெம்பனகவுண்டர் அவருடைய தரப்பினர்களை அவமதிக்கும் வகையில் அழகிரிசாமி மற்றும் வெங்கட்அய்யருடன் வஞ்சக கூட்டாக சேர்ந்து கொண்டு இவ்வழக்கு சம்மந்தமான **வா.சா.ஆ.1** ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றும், அதனால் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. **வா.சா.ஆ.1** ஆவணத்தின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ.2 முதல் 10** வரையிலான ஆவணங்களும் பெறப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12. வாதி கோவில் 2 , 3 பிரதிவாதிகளின் குல தெய்வம் என்றால் அது பற்றி எனக்குதெரியாது. மேற்படி கோவில் நடைபெற கூடிய விஜயதசமி திருவிழாவான 2, 3 பிரதிவாதிகளின் சமூகத்தின் சார்பாக முன்னின்று மேற்படியார்கள் நடத்துகிறார்கள் என்றால் எங்களையும் சேர்த்து இருதரப்பாக இருந்து தான் நடத்திவருகிறோம். கோவிலில் நடைபெறக்கூடிய ராம நவமி, கிருஷ்ண ஜெயந்தி, உரிக்கட்டு, நவராத்திரி கொலு பூஜை, புரட்டாசி மாத சனிக்கிழமை மிரவணை, மகா சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி அனைத்து திருவிழாக்களையும் 2 , 3 பிரதிவாதிகள் முன்னின்று நடத்தி வருகிறோம் என்றால் நாங்களும் அவர்களுடன் சேர்ந்து தான் நடத்தி வருகிறோம். நான் தாக்கல் செய்த நிரூபண உறுதிக் கூற்றில் மேற்சொன்ன விவரத்தை நான் குறிப்பிட்டு சொல்லிஉள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்த வழக்குரையிலாவது சொல்லி உள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எங்களுக்கு தனிப்பட்ட உரிமை இல்லாத கோவிலின் நந்தவனம் மற்றும் மடம் குறித்து அழகிரிசாமி மற்றும் வெங்கட்அய்யரின் குடும்பத்தை சார்ந்த 8

நபர்களுடன் வஞ்சக கூட்டாக **வா.சா.ஆ.**1 ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே நடைபெற்ற வழக்கின் தீர்ப்புகளை தெரிந்து கொண்டே மோசடியாக **வா.சா.ஆ.**1 ஆவணத்தை உருவாக்கி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

எனவே வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்பதால் வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

PUSHPARAJ SHARMILA

Digitally signed by PUSHPARAJ SHARMILA
Date: 2024.08.07 18:52:04 +0000